தமிழ்நாடு அரசு

# தமிழ்

## முதல் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்.

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு : தி.பி.2041; (2010)
மறு பதிப்பு : 2012
(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)


## பாடநூல் குழு

**த. தனுஷ்கோடி,**
குழுத்தலைவர், முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
காளையார்கோவில், சிவகங்கை.

**பா. விஜயராணி,**
தலைமையாசிரியை,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
பார்வதிபுரம், கடலூர்.

**சே. கிருஷ்ணவேணி,**
தலைமையாசிரியை, அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப்பள்ளி,
முகப்பேர், திருவள்ளூர்.

**டே. வில்லியம் கிறிஸ்டோபர்,**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
திண்டுக்கல்.

**மு. சரஸ்வதி,**
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
சென்னேரி, காஞ்சிபுரம்.

**வே. சுடர்ஒளி,**
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
மேலப்பேடு, திருவள்ளூர்.

**கா. ஜோதிலட்சுமி,**
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
தொட்டமெட்டறை, கிருஷ்ணகிரி.

**பா.ச. குப்பன்,**
இடைநிலை ஆசிரியர், வள்ளுவர் நடுநிலைப்பள்ளி,
திருநாகேஸ்வரம், குன்றத்தூர், காஞ்சிபுரம்.

## வல்லுநர் குழு

முனைவர் **கோ.பழனி,** உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
முனைவர் **இ. கோமதி நாயகம்,** முதுகலைத் தமிழாசிரியர் (ஓய்வு)

## மேலாய்வுக் குழு

**வா.அ.சிவஞானம்,** மேனாள் பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.
**அ.திருஞானசம்பந்தம்,** மேனாள் மாவட்டக் கல்வி அலுவலர், சென்னை.



## நன்றி

**ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதியம்,** (யுனிசெப்)

| அட்டை வடிவமைப்பு | ஓவியம் | வடிவமைப்பு |
|---|---|---|
| மணியம் செல்வன் | ச. செந்தில்குமார், இராம்கி | இரா.பாலாஜி |

## பாடநூல் உருவாக்கம்

**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்**
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

## நூல் அச்சாக்கம்

**தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

**விலை : .ரூ.**

இந்நூல் 80 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கின்றேன்.

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

## இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்!

– பாவேந்தர் பாரதிதாசன்

அன்பு ஆசிரியர்களே !

மொழி ஒரு வலுவான ஊடகம். மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஏதோ ஒரு மொழியின் உறவுடன்தான் பிறக்கின்றது. அக்குழந்தை தாயின்வழியாகவும், சமூகத்தின் வழியாகவும் மொழியறிவைப் பெற்றுத் தன் மொழியை உயிர்ப்போடு வெளிப்படுத்தத் தொடங்குகிறது.

ஒருவர், தம் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்த மொழி இன்றியமையாதது. மொழியைத் திறம்படக் கையாளும் குழந்தையால்தான் தன்னைச் சுற்றியுள்ளவர்களுடனும் எளிதாகத் தொடர்புகொள்ளமுடியும். தான் வாழும் சமூகத்தில் எதிர்ப்படும் இடர்ப்பாடுகள் என்னவென்பதைப் புரிந்துகொண்டு அதற்குத் தீர்வுகாண்பதற்கு மொழியே கருவியாக விளங்குகிறது. கற்றலுக்கும் மொழியே அடிப்படை.

மொழியைப் புரிந்துகொண்டு நன்றாக உரையாடத் தெரிந்தபின்பே குழந்தை பள்ளிக்கு வருகின்றது. ஆனால், பள்ளிச்சூழலில் தனக்குத் தெரிந்த மொழியில் உரையாட, தன் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்த குழந்தையால் இயலுவதில்லை. அதற்கு, எது காரணமாக இருக்க முடியும் ? புதிய சூழலும் பயமும்தான். இவற்றைப் போக்கி, குழந்தை ஏற்கெனவே அறிந்த மொழியின் வாயிலாக வளமான கருத்துகளையும் படைப்பாற்றலையும் வளர்க்கவேண்டிய மிகப்பெரும் கடமை நமக்கு இருக்கிறது. இந்த அரிய நோக்கத்திற்கு உதவும்வகையில்தான் இப்புதிய பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடநூல், குழந்தையை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தை, தானே விரும்பிக் கற்கும்வகையில் ஒவ்வோர் இயலும் வண்ணப்படங்களுடன் உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

குழந்தை ஆடிப்பாடி மகிழும்வகையில் பாடல்களும் தரப்பட்டுள்ளன. வகுப்பறைக்குள்ளேயும் வெளியேயும் விளையாடி மகிழ்வதற்காக ஆங்காங்கே விளையாட்டுகள் தரப்பட்டுள்ளன.

குழந்தை இயல்பாகப் பேசவும், உரையாடவும், கருத்தை வெளிப்படுத்தவும் உதவும் வண்ணம் பல வாய்ப்புகள் இப்பாடநூலில் அளிக்கப்பட்டுள்ளன. குழந்தையே படித்து, விவரித்துக் கூறும்வகையில் படக்கதைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தன் குடும்பம் பற்றிப் பேசவும் தனக்குப் பிடித்த பொருளாகவே மாறிப்பேசவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், குழந்தைக்கு அறிமுகமான பொருள்கள், படத்தொகுப்புகளாக அளிக்கப்பட்டுள்ளன. அப்படத்தொகுப்பைப் பார்த்து இயல்பான சொற்றொடர்களில் பேசச் செய்வதற்கும், அச்சொற்றொடர்களிலிருந்து சொற்களையும், சொற்களிலிருந்து எழுத்துகளையும் கற்கும் வண்ணம் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இத்தொடர்பினை நன்கு உணர்ந்து குழந்தையின் கற்றலுக்கு உதவவேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் குழந்தையின் சொற்களஞ்சியம் பெருகும்.

"வரைந்துகாட்டுவேன்" பகுதி, எழுத்துகளை எழுதுவதற்கான ஆயத்தப் பயிற்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. "எழுதிப்பழகுவேன்" பகுதி எழுத்துகளை எளிதாக எழுதிப் பழகுவதற்கேற்ப, புள்ளியிட்ட வரிவடிவங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய இரண்டு பயிற்சிகளையும் பலமுறை எழுதிப் பழகச் சொல்லவும். மேலும், எழுத்துகளின் வடிவத்தையும் அதன் அமைப்பையும் குழந்தை எளிமையாக விளங்கிக்கொள்ள எழுத்து அட்டைகளை அடுக்குதல் செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. படத்துடன் சொல் அட்டைகளைக்கொண்டு சொற்களை அறிமுகப்படுத்துதலும் சொல் தொடர்வண்டி அட்டைகள் அடுக்கி விளையாடுதலும் சொற்களை நன்கு அடையாளப்படுத்திக் கொள்ள குழந்தைக்கு உதவும்.

ஆசிரியர் வழிகாட்டுதலோடு, 'குழந்தை தானாகக் கற்பது' என்பது இங்கு முதன்மை பெறுகிறது. “நானே படிப்பேன், நானே எழுதுவேன், நானே வரைவேன், நானே சொல்வேன்” போன்ற தலைப்புகள், குழந்தையின் தன்னம்பிக்கையை வளர்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

"கற்றல் சுவையாக இருந்தால்தான் கல்வியும் சுவையாக இருக்கும்" என்பதைக் கருத்திற்கொண்டு "கற்றல் குழந்தைக்குச் சுவையாகத் தோன்றும் வண்ணம்" இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடநூலை உயரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும், அதனை வகுப்பறையில் செயல்படுத்திக் கற்பிப்போர் ஆசிரியர்களே. எனவே, நீங்கள் இந்நூல் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் நன்கு உணர்ந்து செயலாற்றுவீர்கள் என நம்புகிறோம். வளமிக்க வருங்காலத் தலைமுறையை உருவாக்க எண்ணும் உங்களுக்கு, இந்நூல் ஒரு தூண்டுகோலாக இருக்கும் என நம்புகிறோம்.

அன்புடன்,
ஆக்கியோர்.




# பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆடிப்பாடி மகிழ்வோம் | 1 |
| 2. | என் இனிய உலகம் | 8 |
| 3. | என் ஊர் | 20 |
| 4. | காய்! காய்! காய்! | 29 |
| 5. | வண்ண வண்ணப் பூக்கள் | 39 |
| 6. | யானை வருது! யானை வருது! | 49 |
| 7. | வா! மழையே வா! | 61 |
| 8. | ஏலேலோ ஐலசா | 75 |

# ஆடிப்பாடி மகிழ்வோம்

1



படத்திலுள்ள விலங்குகள், பறவைகள், பூச்சிகள் ஆகியவை என்ன செய்கின்றன? என்பதைக் குழந்தைகளோடு கலந்துரையாடவும்.



# டம் டம்... டும் டும்... கச்சேரி






காக்கா அந்தப்பக்கம் கா, கா, கா ...
கிளி இந்தப்பக்கம் கீ, கீ, கீ...

குயில் மரத்தில கூ, கூ, கூ...
கோழி கூரையில கொக், கொக்,கொக்...
பசுவும் கன்றும் மா, மா, மா...
பதுங்கும் பூனை மியாவ், மியாவ், மியாவ்...

மேயும் ஆடு மே, மே, மே...
காக்கும் நாய் லொள், லொள், லொள்...

டம் டம் ... டும் டும் ... கச்சேரி
நடக்குது பாரு ஊருக்குள்ளே.





# ஒலி எழுப்பி விளையாடுவோம்





- குழந்தைகளை இரு குழுக்களாகப் பிரித்து எதிரெதிர் வரிசையில் நிற்கச் செய்யவும்.
- ஒரு குழுவில் உள்ள ஒவ்வொரு குழந்தையின் காதிலும் ஏதேனும் ஒரு பறவை, விலங்கு அல்லது வாகனத்தின் பெயரைச் சொல்லவும்.





- அதே பெயர்களை அடுத்த குழுவினருக்கும் சொல்லவும்.
- ஆசிரியர் கையொலி எழுப்பியவுடன், குழந்தைகள் தமக்குச் சொல்லப்பட்ட பறவை அல்லது விலங்கினைப்போல ஒலி எழுப்பிக்கொண்டே, தன் இணையைத் தேடிச் சேர்ந்துகொள்ளச் செய்யவும்.

# புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுவேன்





# பொருத்தமான நிழலைக் கண்டுபிடிப்பேன்



# வண்ணக்கோலங்கள் உருவாக்குவோம்







- ஒரு பெரிய கோலம் (ரங்கோலி) வரையவும். குழந்தைகளை அதன்மேல் சிறு இலைகள், பூக்கள், சோழிகள், விதைகள், மணல், சிப்பி, வண்ணப் பொடிகள் போன்றவற்றைக்கொண்டு அழகுபடுத்தச் சொல்லவும்.
- பல வண்ணப்பொடிகளை ஒன்றாகக் கலந்து வேறு வண்ணங்களை உருவாக்கச் சொல்லவும்.



# விடுபட்டதை வரைந்து வண்ணம் தீட்டுவேன்



# வேறுபட்டதை வட்டமிடுவேன்



# நத்தையம்மா

நத்தையம்மா, நத்தையம்மா,
எங்கே போகிறாய் ?
அத்தை குளிக்கத் தண்ணீர்க் குடம்
கொண்டு போகிறேன்.
எத்தனைநாள் ஆகும் அத்தை
வீடு செல்லவே ?
பத்தே நாள்தான்; வேணு மானால்
பார்த்துக் கொண்டிரு.

– அழ. வள்ளியப்பா






## விளையாடுவோம்

- வகுப்பறைக்கு வெளியே பெரிய வட்டம்போட்டு அதில் குழந்தைகளை நிற்கச் செய்யவும்.
- ஆசிரியர், நத்தை என்று கூறும்போது குழந்தைகளை மிக மெதுவாகவும், முயல் என்று கூறும்போது மிக வேகமாகவும், பருந்து என்று கூறும்போது பக்கவாட்டில் கைகளை நீட்டியவாறும், வட்டத்தைவிட்டு விலகாமல் நடக்கச் செய்யவும்.
- அடுத்த விளையாட்டாகக் குழந்தைகளை எண்ணிக்கைக்கு ஏற்ப நான்கு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவினரையும் பக்கவாட்டில் நீட்டிய இரண்டு கைகளிலும் புத்தகங்கள் ஏந்தியவாறு வட்டத்தைவிட்டு விலகாமல் நடக்கச் செய்யவும்.

# வழியை வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.



விளையாட
வாங்க...!

2

# என் இனிய உலகம்



குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் பற்றிப் பேசத் தூண்டவும்.

# என் பந்து



சின்னச் சின்னப் பந்து
சிறுமி ஆடும் பந்து

வண்ண வண்ணப் பந்து
வானில் பாயும் பந்து

குட்டிக் கையால் தட்டினால்
குதித்து ஓடும் பந்து

எட்டி ஓங்கி உதைத்தால்
எங்கோ போகும் பந்து!





- குழந்தைகளை வட்டமாக நிற்கச் செய்யவும்.
- ஆசிரியர் வட்டத்தின் நடுவில் நின்று, ஒவ்வொரு குழந்தையின் பெயரைக் கூறிக்கொண்டே அக்குழந்தைக்குப் பந்தைப் போடவும். இவ்வாறு தொடர்ந்து சில சுற்றுகள் விளையாடவும்.
- ஆசிரியர் விளையாடியதைப் போன்று ஒவ்வொரு குழந்தையையும் விளையாடச் சொல்லவும்.
- குழந்தைகளுக்குத் தங்கள் பெயர்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிமுகம் ஆகும்வரை தொடர்ந்து விளையாடச் செய்யவும்.

என் குடும்பம்
பற்றிச் சொல்லவா... ?

# என் குடும்பம்



என் அப்பா பெயர் கபிலன்.



என் அம்மா பெயர் தேன்மொழி.



என் தம்பி பெயர் இனியன்.



என் பெயர் இலக்கியா.
எனக்கு விளையாடப் பிடிக்கும்.



என் தாத்தா பெயர் தமிழ்மணி.




என் பாட்டி பெயர் பூங்காவனம்.


ஒவ்வொரு குழந்தையையும் தங்கள் குடும்பத்தில் யார்? யார்? உள்ளார்கள் என்பதைக் கூறச் செய்யவும்.



# வண்ணம் தீட்டுவேன்



## எனக்கும் பேச ஆசை!





- படத்திலுள்ளவை பற்றிக் குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த ப, ம, பா, மா எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களையும் குழந்தைகளின் பெயர்களையும் கூறச் செய்யவும்.



# நான் சொல்வேன்



படம்




பட்டம்



மரம்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக் குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.




- எழுத்துகளை அறிமுகப்படுத்தி அவற்றின்மீது விரல்வைத்துச் சொல்லிக்கொண்டே தடவிப் பார்க்கச் செய்யவும்.
- உப்புத்தாளில் எழுத்துகளைத் தயாரித்துத் தடவிப் பார்க்கச் செய்யவும்.
- சுண்ணக்கட்டியால் (சாக்பீஸ்) தரையில் ட, ப, ம, ர ஆகிய எழுத்துகளை எழுதி அதன்மீது புளியங்கொட்டைகளையோ சிறிய கற்களையோ அடுக்கச் செய்யவும்.

# படமும் பெயரும்



படம்



மரம்



பட்டம்

| ப | ட | ம் |
|---|---|---|
| ப | ட | ம் |

| ம | ர | ம் |
|---|---|---|
| ம | ர | ம் |

| ப | ட் | ட | ம் |
|---|---|---|---|
| ப | ட் | ட | ம் |


எழுத்து அட்டைத் துண்டுகளைக் கொடுத்துச் சொல்லிக்கொண்டே அடுக்கச் செய்யவும்.

## சொல் தொடர்வண்டி உருவாக்கலாம்




சொல் அட்டைகளைக் கொடுத்துச் சொல் தொடர்வண்டி உருவாக்கச் செய்யவும்.

## வழியை வரைந்து காட்டுவேன்





சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

ட ட ட ட ட ட ட ட ட

ப ப ப ப ப ப ப ப ப

ம ம ம ம ம ம ம ம ம

ர ர ர ர ர ர ர ர ர

குழந்தைகளை, கீழ்மட்டக் கரும்பலகையிலும் எழுதிப் பழகச் சொல்லவும்.

# படம் பார்த்து பெயர் எழுதுவேன்




நான் **படம்** பார்க்கிறேன்.

படம் படம் படம் படம்



எனக்குப் **பட்டம்** விட ஆசை.

பட்டம் பட்டம் பட்டம்



நான் **மரம்** ஏறுவேன்.

மரம் மரம் மரம் மரம்

படம் பட்டம் மரம்

# நான் சொல்வேன்



பாப்பா




மாமரம்



பாய்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.



- எழுத்துகளை அறிமுகப்படுத்தி அவற்றின்மீது விரல்வைத்துச் சொல்லிக்கொண்டே தடவிப் பார்க்கச் செய்யவும்.
- உப்புத்தாளில் எழுத்துகளைத் தயாரித்துத் தடவிப் பார்க்கச் செய்யவும்.
- சுண்ணக்கட்டியால் (சாக்பீஸ்) தரையில் பா, மா ஆகிய எழுத்துகளை எழுதி, அதன்மீது புளியங்கொட்டைகளையோ சிறிய கற்களையோ அடுக்கச் செய்யவும்.
- எழுத்து அட்டைத் துண்டுகளைக் கொடுத்துச் சொல்லிக்கொண்டே அடுக்கச் செய்யவும்,
- சொல் அட்டைகளைக் கொடுத்துச் சொல் தொடர்வண்டி உருவாக்கச் செய்யவும்.

## வழியை வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | பா | பா | பா | பா | பா | பா | பா |
| மா | மா | மா | மா | மா | மா | மா | மா |
| யா | யா | யா | யா | யா | யா | யா | யா |

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



பாப்பா

பாப்பா பார்.

பாப்பா பாப்பா பாப்பா



மாமரம்

மாமரம் ஏறுவேன்.

மாமரம் மாமரம் மாமரம்



பாய்

பாய் விரித்தேன்.

பாய் பாய் பாய் பாய்



## நானே படிப்பேன் நானே எழுதுவேன்

பாடம் பாப்பா பம்பரம் பட்டம்


படம் மடம் மட்டம்

மாடம் மாமரம் மரம் பட பட

மட மட பாய்

பார் பார் பட்டம் பார்!
பார் பார் பம்பரம் பார்!

## நானே நிரப்புவேன்




## நான் பேசுவேன்

எனக்கு விருப்பமான விளையாட்டைச் சொல்லட்டுமா...

★ செய்தித்தாளைக் கொடுத்துத் தெரிந்த எழுத்துகளை வட்டமிடச் செய்யவும்.

## சொல் உருவாக்குவேன்




பாடம் .......................... ..........................

.......................... ..........................

.......................... ..........................

.......................... ..........................

## வேறுபட்டதைக் × குறியிடுவேன்

| | | | |
|---|---|---|---|
| பா | பாடம் | பாப்பா | ~~பம்பரம்~~ |
| ப | படம் | பட்டம் | பாடம் |
| ம | மரம் | மாமரம் | மட்டம் |
| மா | மாமரம் | மாடம் | மரம் |

## உருவங்கள் செய்வோம்




★ குழந்தைகளிடம் களிமண் / சீனக்களிமண்ணைக் கொடுத்து முறையே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து விரல்களைக் கொண்டு திரிக்கச் செய்யவும்.

★ சிறுசிறு உருண்டைகள் செய்து, துளையிட்டு உலர வைக்கவும். உலர்ந்தபின் வண்ணம் தீட்டி மாலைகள் உருவாக்கி மகிழச் செய்யவும்.

★ களிமண்ணைக்கொண்டு விரும்பும் உருவங்களைச் செய்து, மகிழச் செய்யவும்.

நாங்கள்
படிப்போம்...

# பட்டம்














படத்திலுள்ள செயல்களைப் பற்றிக் குழந்தைகளைக் கூறச் செய்யவும்.

படத்திலுள்ள சொற்களைப் படிக்கச் செய்யவும்.

3

# என் ஊர்



குழந்தைகள் தங்கள் ஊரைப்பற்றிப் பேசச் செய்யவும்.

# செல்லக் குட்டி

சின்னச் சின்ன நாய்க்குட்டி
செல்லமான நாய்க்குட்டி
பள்ளிக்கூடம் விட்டு வந்தால்
பாய்ந்து வரும் நாய்க்குட்டி
கொஞ்சம் நானும் பக்கம் வந்தால்
கொஞ்சி வரும் நாய்க்குட்டி
எட்டாத் தூரம் செல்லும் பந்தை
எடுத்து வரும் நாய்க்குட்டி.




குழந்தைகள் வளர்க்க விரும்பும் செல்ல விலங்குகள் எவை ?
ஏன் ? என்பது குறித்துக் குழந்தைகளுடன் கலந்துரையாடவும்.



## கண்ணைக் கட்டு! விளையாடு!




கரும்பலகையில் ஒரு நாய்க்குட்டியின் படத்தை வரையவும் அல்லது ஒட்டவும். ஒவ்வொரு குழந்தையாகக் கண்களை மூடிக்கொண்டு நாய்க்குட்டியின் நெற்றியில் பொட்டு ஒட்டச் செய்யவும்.




- படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த க,ச, த, ந எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களையும் குழந்தைகளின் பெயர்களையும் கூறச் செய்யவும்.




# நான் சொல்வேன்



கரகம்



காகம்



சக்கரம்



தச்சர்



தாத்தா



பழம்




நகம்




நாய்

**படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக் குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.**




பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்




சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

**எழுதிப் பழகுவேன்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | ச | ச | ச | ச | ச | ச |
| க | க | க | க | க | க | க |
| த | த | த | த | த | த | த |
| ந | ந | ந | ந | ந | ந | ந |
| ழ | ழ | ழ | ழ | ழ | ழ | ழ |

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



வண்டியில் **சக்கரம்** இருந்தது.

சக்கரம் சக்கரம் சக்கரம்



**தாத்தா** கதை சொல்வார்.

தாத்தா தாத்தா தாத்தா



**நாய்** வாலை ஆட்டும்.

நாய் நாய் நாய்




மாமா **பழம்** தந்தார்.

பழம் பழம் பழம் பழம்

# நான் நிரப்புவேன்



க ☐ ☐ ம்



☐ க ☐



த ☐ ச ☐



தாத் ☐



☐ ய்



ப ☐ ம்

## நான் பேசுவேன்

என் ஊரில் நடந்த விழாக்களைச் சொல்லட்டுமா... ?

## பிடித்தது எது ? அதுவாக மாறுவேன் !


















குழந்தைகளுக்குப் பிடித்தவற்றைக் கேட்டு, அதுவாக மாறி நடிக்கச் செய்யவும்.


# நான் சொல்வேன்


மாங்காய்


பாகற்காய்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.





பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்



## எழுதிப் பழகுவேன்

ஙு ஙு ஙு ஙு ஙு ஙு ஙு

ஙூ ஙூ ஙூ ஙூ ஙூ ஙூ ஙூ



மாங்காய் புளிக்கும்.

மாங்காய் மாங்காய் மாங்காய்



பாகற்காய் கசக்கும்.

பாகற்காய் பாகற்காய்



## நானே படிப்பேன் நானே எழுதுவேன்

கம்பம் தந்தம் சாயம் காயம்

நகம் மாம்பழம் நாட்டம்


மாதம் தச்சர் தாயம் யாழ்

சத்தம் மாங்காய் பாகற்காய்

சங்கம் மாற்றம் நாற்றம் தங்கம்

பார் பார் பாப்பா பார்!
பார் பார் தாத்தா பார்!

## சொல் உருவாக்குவேன்




பழம்

.............................. ..............................

.............................. ..............................

.............................. ..............................

.............................. ..............................

## சொற்களை வகைப்படுத்துவேன்

பட்டம், சாயம், மட்டம், காயம், சட்டம்,
தாயம், வட்டம்,பயம், கட்டம், மாயம்.

| பட்டம் | தாயம் |
|---|---|
| ............... | ............... |
| ............... | ............... |
| ............... | ............... |
| ............... | ............... |



# ஒலிகள்




பட்... பட்...



டம்... டம்...



பட... பட...



தட... தட...



மட... மட...

படத்திலுள்ள செயல்களைப் பற்றி குழந்தைகளைக் கூறச் சொல்லவும்.

சொற்களைப் படிக்கச் செய்யவும்.

4

## காய்! காய்! காய்!

இவ்வளவு வேணுமா பாகற்காய்?
அத்துடன் வேணும் பீர்க்கங்காய்!
இவ்வளவு வேணுமா பீர்க்கங்காய்?
அத்துடன் வேணும் கத்தரிக்காய்!
இவ்வளவு வேணுமா கத்தரிக்காய்?
அத்துடன் வேணும் வாழைக்காய்!
இவ்வளவு வேணுமா வாழைக்காய்?
அத்துடன் வேணும் முருங்கைக்காய்!
இவ்வளவு வேணுமா முருங்கைக்காய்?
அத்துடன் வேணும் சுண்டைக்காய்!
இன்னும் வேணுமா உனக்கு?
எல்லாம் வேணுமே எனக்கு!



**ஆசிரியர் காய் காய் என்று கூறிக் குழந்தைகளைத் தங்களுக்குத் தெரிந்த காயின் பெயரை அச்சொல்லோடு இணைத்துக் கூறச் செய்யவும். (எ.கா) காய் காய் வாழைக்காய்.**

# அச்சுப் பதித்து மகிழ்வோம்



வெங்காயம், வெண்டைக்காய், பாகற்காய் ஆகியவற்றைக் கொண்டு வெள்ளை வட்டங்களில் அச்சுப் பதித்து பூக்கள் உருவாக்கி மகிழவும்.

## வயலுக்குப் போவோம்!





- படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த வ, வா, எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களையும் குழந்தைகளின் பெயர்களையும் கூறச் செய்யவும்.



# நான் சொல்வேன்


கப்பல்


கண்


பலா


வயல்


வானம்



மான்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச்சொற்களை அறிமுகப்படுத்தவும்.

ல வ ள ண

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வழியை வரைந்து காட்டுவேன்




சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ல | ல | ல | ல | ல | ல | ல |
| வ | வ | வ | வ | வ | வ | வ |
| ன | ன | ன | ன | ன | ன | ன |
| ண | ண | ண | ண | ண | ண | ண |

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



நான் **கப்பல்** செய்வேன்.

கப்பல் கப்பல் கப்பல் கப்பல்



எனக்குப் **பலா**ப்பழம் பிடிக்கும்.

பலா பலா பலா பலா



நீல **வானம்** அழகு.

வானம் வானம் வானம் வானம்




என் **கண்** அழகு.

கண் கண் கண் கண்

# நான் சொல்வேன்

## அறிந்த எழுத்துகளுக்கு வண்ணமிடுவேன்






மஞ்சள்




மத்தளம்




காளான்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக் குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.




பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்







சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

ள ள ள ள ள ள

ஞ ஞ ஞ ஞ ஞ ஞ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



மத்தளம் கொட்டு.

மத்தளம் மத்தளம் மத்தளம்



காளான் முளைத்தது.

காளான் காளான் காளான்



மஞ்சள் விளைந்தது.

மஞ்சள் மஞ்சள் மஞ்சள்

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

நாள் வாய் மான் வணக்கம்

மக்கள்

வற்றல் பலா மணல் வயல்

பண்டம்

கப்பல் தாழ்ப்பாள் காளான்

மத்தளம்

 பார்

காளான் பார்
வண்ணப்பட்டம்

வண்ணப் 

## எழுத்துகளை இணைத்துச் சொல் உருவாக்குவேன்!

ப, க, பா — ல் — ப ல்

தா, நா, வா — ள்

ம, க, கா — ண்

## நான் பேசுவேன்

எனக்குப் பிடித்த காய்கள், பழங்களைச் சொல்லட்டுமா... ?

## எழுத்துகளை மாற்றிச் சொல்லாக்குவேன்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல் | வ | ய | | | வ | ய | ல் | | |
| ம் | ப | ண் | ட | | | | | | |
| ர் | ம | ல | | | | | | | |
| ச | ம் | பா | ய | | | | | | |
| ம் | க் | க | ண | வ | | | | | |

## அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன்
## வட்டமிடாத எழுத்துகளைப் படித்து எழுதுவேன்

ப் ழ ஞா ழா
க ட ள ந நா
ஞ ங ச
வ ப
ண ன் யா ற
ங் ய ந்
ழ் னா த
க் ஞ் ர் சா
வ் ம பா ல



நாங்கள் படிப்போம்...

# காய்கள்



காய்கள் வாங்கலாம்





காய் காய் 

காய் காய் 





காய் காய் 

காய் காய் 

படத்திலுள்ள செயல்களைப் பற்றி குழந்தைகளைக் கூறச் செய்யவும்.

படத்திலுள்ள சொற்களைக் காயுடன் இணைத்துப் படிக்கச் செய்யவும்.

5

# வண்ண வண்ணப் பூக்கள்

மல்லிகைப்பூவே! மல்லிகைப்பூவே!
எங்க போறீங்க ?
மஞ்சள் சாமந்தி பூத்துச்சான்னு
பார்க்கப் போறேங்க!
சாமந்திப்பூவே சாமந்திப்பூவே
எங்க போறீங்க ?
வெள்ளைத் தாமரை பூத்துச்சான்னு
பார்க்கப் போறேங்க!
தாமரைப்பூவே தாமரைப்பூவே
எங்க போறீங்க ?
சிவப்பு ரோஜா பூத்துச்சான்னு
பார்க்கப் போறேங்க!
ரோஜாப்பூவே ரோஜாப்பூவே
எங்க போறீங்க ?
பூத்தபூவைப் பறிச்சி
உனக்குச் சூட்டப் போறேங்க!






- படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த அ, ஆ, இ, ஈ எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களையும் குழந்தைகளின் பெயர்களையும் கூறச் செய்யவும்.



# நான் சொல்வேன்



அணில்


ஆலமரம்


இட்டலி


மிதிவண்டி


கிளி



விசிறி

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.




பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

அ அ அ அ அ அ அ

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

இ இ இ இ இ இ இ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



**அணில்** பழம் தின்னும்.

அணில் அணில் அணில்



**ஆலமரம்** பெரியது.

ஆலமரம் ஆலமரம் ஆலமரம்



நான் **இட்லி** சாப்பிட்டேன்.

இட்லி இட்லி இட்லி



**கிளி** பேசும்.

கிளி கிளி கிளி கிளி

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

கடிகாரம்

அப்பா

பயிர்

ஆணி

காய்கறி

சிங்கம்

இஞ்சி

தம்பி


அரிசி

இடி 


இடி மின்னல்
ஆண் சிங்கம்

ஆண் 


## காகித நாய்க்குட்டி செய்யலாம்




தாளைச் சதுரமாக வெட்டவும்




இரு முனைகளையும்
இணைத்து மடிக்கவும்



இரு பக்க முனைகளையும்
படத்தில் உள்ளவாறு மடிக்கவும்



மேலும் கீழும் படத்தில்
உள்ளவாறு மடிக்கவும்




கண்கள், மூக்கு, வாய் வரையவும்

# நான் சொல்வேன்



ஈ



கீரி



இளநீர்



தீ




கிரீடம்



மீன்


படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.





பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

# எழுதிப் பழகுவேன்

ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ


கீ கீ கீ கீ கீ கீ கீ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



ஈ பறந்தது.

ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ



கீரி ஓடியது.

கீரி கீரி கீரி கீரி கீரி கீரி



நான் இளநீர் குடித்தேன்.


இளநீர் இளநீர் இளநீர் இளநீர்



நான் கிரீடம் அணிந்தேன் .

கிரீடம் கிரீடம் கிரீடம்

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்




**நீச்சல் அடி**

**தண்ணீர் குடி**

## நான் பேசுவேன்

**பழங்கள், பூக்களின் பெயர்களை ஆசிரியர் கூற, நான் அவற்றின் வண்ணங்களைக் கூறுவேன்.**

**உங்கள் பகுதியில் கிடைக்கும் பல வண்ண மலர்கள், இலைகளைக்கொண்டு பூங்கொத்துச் செய்து மகிழுங்கள்.**


## விளையாடுவோம்

- குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்பக் குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவினரையும் வகுப்பறைக்கு வெளியிலுள்ள பலவிதப் பொருள்களைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சேகரிக்கச் சொல்லவும்.
- அதிக எண்ணிக்கையில் பொருள்களைச் சேகரித்த குழுவினரைப் பாராட்டவும்.

## அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன்.
## வட்டமிடாத எழுத்துகளைப் படித்து எழுதுவேன்

கி ஞி நீ ரீ ழீ ழி மீ டீ யீ ளீ மி ஙி ஈ ஞீ பி ணீ றீ ணி ஙீ லீ

### நான் நிரப்புவேன்




குடத்தில் உள்ள எழுத்துகளைச் சுவரில் கண்டுபிடித்துக் ✕ குறியிடுவேன்
ஒளிந்திருக்கும் இனிப்பைக் கண்டுபிடிப்பேன்.







| | | | |
|---|---|---|---|
| | | | |




# வா... வா...













படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைக் கூறச் செய்யவும்.
படத்திலுள்ள சொற்களைப் படிக்கச் செய்யவும்.

6

# யானை வருது... யானை வருது...



யானை வருது யானை வருது
யானை வருது டோய் ...
தும்பிக்கையை ஆட்டி ஆட்டி
யானை வருது டோய் ...

யானை மேலே யானை மேலே
பூனை வருது டோய்...
மீசை முறுக்கி மீசை முறுக்கி
பூனை வருது டோய்...

பூனை மேலே பூனை மேலே
குருவி வருது டோய்...
இறக்கை அடித்து இறக்கை அடித்து
குருவி வருது டோய்...

குருவிக் கூட்டம் போல – ஆங்கே
குழந்தைகள் வந்தனர் டோய்...
குழந்தைகள் போட்ட கூச்சலாலே
குருவி பறந்தது டோய்...






- படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த உ, ஊ, எ, ஏ வரிசை எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்கள், குழந்தைகளின் பெயர்களைக் கூறச் செய்யவும்.



## நான் சொல்வேன்


உழவர்


பசு


முயல்


ஊசி


தூண்டில்


பலூன்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக் குழந்தைகளிடம் கொடுத்து சொற்களை அறிமுகப்படுத்தவும்.

உ ஊ மு லூ

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்





சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

# எழுதிப் பழகுவேன்

உ உ உ உ உ உ உ

ஊ ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



**உழவர்** உழுகிறார்.

உழவர் உழவர் உழவர்



**முயல்** துள்ளி ஓடுகிறது.

முயல் முயல் முயல்



**ஊசி** தைக்க உதவும்.

ஊசி ஊசி ஊசி ஊசி



வண்ண வண்ணப் **பலூன்**.

பலூன் பலூன் பலூன்

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

உலகம்

உப்பு

ஊதல்

மூக்கு

பூட்டு

நுங்கு

சூரியன்

வானூர்தி

ஊசி

பந்து


புழு

முறுக்கு


ஊசி நூல்
புலி ஆட்டம் ஆடு
குயில் கூவியது
காகம் கூடு கட்டியது

குரங்கு

## புள்ளிகளை இணைப்பேன்



## இவை பழத்தைக் கொத்தினால் .....




## படம் பார்த்து பெயர் எழுதுவேன்









## நான் பேசுவேன்

நான் பள்ளிக்கு வரும் நாள்கள்...

என் பள்ளி விடுமுறை நாள்கள்...

# நாள்தோறும் செய்வேன்










படத்தில் உள்ளவை போல் நாள்தோறும் குழந்தைகள் பின்பற்றும் நல்ல பழக்கங்கள் பற்றிக் கலந்துரையாடவும்.

# நான் சொல்வேன்



எலி



செங்கல்



நெல்



ஏணி



தேர்



சேவல்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்து சொற்களை அறிமுகப்படுத்தவும்.

எ ஏ செ சே

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்

எ எ எ எ எ எ எ எ எ 

ே ே ே ே ே ே ே ே ே 

சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

எ எ எ எ எ எ எ

ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



**எலி** வளை தோண்டும்.

எலி எலி எலி எலி எலி எலி



**ஏணி** ஏற உதவும்.

ஏணி ஏணி ஏணி ஏணி ஏணி



**நெல்** விளைந்தது.

நெல் நெல் நெல் நெல்



**தேர்** இழுத்தனர்.

தேர் தேர் தேர் தேர்



# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

எருது
வேலி
வெல்லம்
பேருந்து
பெட்டி
தெரு
ஏணி
கெண்டி
மேகம்
சிற்றெறும்பு

நேரு மாமா வந்தார்

முள் வேலி இருந்தது

மர ஏணி பாருங்கள்

தேனீ கூடு கட்டும்

அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன்
வட்டமிடாத எழுத்துகளைப் படித்து எழுதுவேன்

ஙெ வு மெ ளூ னே லு ப டே ழே டீ கி யூ யெ ரே ணு ஞா ஞு ணே வூ சீ



விளையாடுவோம்


★ ஒரு சொல்லையும் அதன் இறுதி எழுத்தில் தொடங்கும் மற்றொரு சொல்லையும் இணை. உருவாகும் வடிவத்திற்கு வண்ணமிடு.

சிலந்தி

குருவி • • விருது

துளசி • • திருகு

## ஒரே வண்ண மணிகளிலுள்ள எழுத்துகளைச் சேர்த்துச் சொல்லாக்குவேன்




## சொல்வதைக் கேட்டு எழுதுவேன்

| | | |
|---|---|---|
| கப்பல் | | |
| | | |
| | | |

குழந்தைகள் அறிந்த சொற்களை ஆசிரியர் கூறி, அவற்றை கேட்டு குழந்தைகளை எழுதச் சொல்லவும்.

# இப்படி இருந்தால்...



வீட்டுக்குச்
சக்கரங்கள் இருந்தால்.....!



மரத்துக்குக்
கால்கள் இருந்தால்.....!

எனக்குச்
சிறகுகள் இருந்தால் .....!



படத்திலுள்ள சொற்களைக் குழந்தைகளையே படிக்கச் சொல்லவும்.
படத்திலுள்ளவை பற்றி கற்பனை செய்து கூறச் சொல்லவும்.

# 7

# வா, மழையே, வா

கத்திக் கப்பல் செய்து வைத்தேன்.
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்.
வா, மழையே, வா.
வா, மழையே, வா.
சின்னச் செடியை நட்டு வைத்தேன்.
செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்.
வா, மழையே, வா.
வா, மழையே, வா.
வீதிப் பக்கம் வந்து நின்றேன்.
மேலே மேலே பார்த்து நின்றேன்.
வா, மழையே, வா.
வா, மழையே, வா.

– அழ. வள்ளியப்பா






- படத்திலுள்ளவை பற்றி குழந்தைகளைப் பேசச் செய்யவும்.
- குழந்தைகளுக்குத் தெரிந்த ஒ, ஓ, ஐ வரிசை எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் பெயர்களைக் கூறச் செய்யவும்.



# நான் சொல்வேன்

5

ஐந்து



குடை



கை



தவளை



வாழை




யானை

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

ஐ கை

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

கை கை கை கை கை கை

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்

| | |
|---|---|
|  | ஒரு கை விரல்கள் ஐந்து.<br>ஐந்து ஐந்து ஐந்து ஐந்து |
|  | பாப்பாவின் கை அழகு.<br>கை கை கை கை கை |
|  | என் குடை சிவப்பு.<br>குடை குடை குடை குடை |
|  | யானை வருகிறது.<br>யானை யானை யானை |

# நான் சொல்வேன்



ஒட்டகம்



கொய்யா



பொங்கல்



ஓடம்



மக்காச்சோளம்



மோதிரம்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்துச் சொற்களை அறிமுகப்படுத்தவும்.

# ஒ ஓ கொ கோ

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்






சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ


ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



ஒட்டகம் நிற்கிறது.

ஒட்டகம் ஒட்டகம் ஒட்டகம்



நான் கொய்யா தின்றேன்.

கொய்யா கொய்யா கொய்யா



ஆற்றில் ஓடம் செல்கிறது.

ஓடம் ஓடம் ஓடம் ஓடம்



எனக்கு மக்காச்சோளம் பிடிக்கும்.

சோளம் சோளம் சோளம்

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

குதிரை ஓடை நத்தை நொடி ஐவர் மழை கோழி தேரோட்டம் ஒன்று மொட்டு பனை தோள் பொம்மை போர் வானொலி இலை

கோழி கொத்தித் தின்னும்

குதிரை ஓடியது


மொட்டு மலர்ந்தது

அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன்
வட்டமிடாத எழுத்துகளைப் படித்து எழுதுவேன்

யொ நை கு நொ றை லொ வை றோ லொ யை போ ர கொ

# குறிப்புகளைக்கொண்டு சொற்கோபுரம் அமைப்பேன்

'அமுதா! வயலுக்குப் **போ**' என்றார் அப்பா.
வயலில் **கோழி** குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது.
**சோளம்** விளைந்திருந்தது.
வழியில் **கோபுரம்** பார்த்தாள்.
**பொன்வண்டு** பறந்தது.
**மரங்கொத்தி** ஒலி எழுப்பியது.




பார்த்து மகிழ்ந்தாள்.


## நான் நிரப்புவேன்

நான் ☐☐☐☐ அணிந்தேன். 

 நான் ☐☐☐☐ சாப்பிட்டேன்.

அணில் ☐☐☐ தின்றது. 

## வரைவேன் வண்ணம் தீட்டுவேன்!



## இலைகளைச் சேகரிப்பேன்
## விரும்பிய உருவங்களை உருவாக்குவேன் !



# நான் சொல்வேன்


ஔவை


கௌதாரி


பௌர்ணமி



வௌவால்

படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளைத் தயாரித்துக்
குழந்தைகளிடம் கொடுத்து சொற்களை அறிமுகப்படுத்தவும்.

# ஔ கௌ

பக்க எண் 15 இல் உள்ள செயல்பாடுகளைப் போலச் செய்யவும்.

## வரைந்து காட்டுவேன்



சிவப்பு வண்ணமிட்ட இடத்திலிருந்து தொடங்கவும்.

## எழுதிப் பழகுவேன்

| | | | | |
|---|---|---|---|---|
| ஔ | ஔ | ஔ | ஔ | ஔ |
| ஔ | ஔ | ஔ | ஔ | ஔ |
| ஔ | ஔ | ஔ | ஔ | ஔ |

## படம் பார்த்து பெயர் எழுதுவேன்



**ஔவைப்** பாட்டி.

ஔவை ஔவை ஔவை



**வௌவால்** மரத்தில் தொங்கும்.

வௌவால் வௌவால்




**பௌர்ணமி** நிலா அழகு.

பௌர்ணமி பௌர்ணமி

# நானே படிப்பேன் நானே எழுதுவேன்

| | | |
|---|---|---|
| பௌர்ணமி | ஔவை | வௌவால் |
| கௌதம் | பௌத்தம் | கௌதாரி |

## பெயர் எழுதுவேன்












# இணைத்து எழுதுவேன்




தலை


_______________

_______________

_______________

_______________

_______________




வடை

_______________

_______________

_______________

_______________

_______________

# நான் கவிதை சொல்வேன்

மழையே மழையே வா! வா!
மல்லிகைச்செடி நான் காத்திருக்கேன்
மழையே மழையே வா! வா!
தென்னைமரம் நான் காத்திருக்கேன்
மழையே மழையே வா! வா!
---- ---- ---- ----
மழையே மழையே வா! வா!
---- ---- ---- ----
---- ---- ---- ----

நாங்கள் படிப்போம்...

# மழை



ஐ! மழை



குளிருதே!



என்ன அது ?



ஐ! என் குடை

படத்திலுள்ள சொற்களைக் குழந்தைகளையே படிக்கச் சொல்லவும்.
படத்தைப் பார்த்துக் கதையாகக் கூறச் செய்யவும்.

8

# ஏலேலோ ஐலசா


ஏலேலோ ஏலேலோ ஏலே லோ ஐலசா
ஏலேலோ ஏலேலோ ஏலே லோ ஐலசா

வாழை மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா
வாகாகச் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தென்னை மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா
தேர்ந்தெடுத்துச் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

தேக்கு மரத்தாலே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா
தேடித்தான் செய்தேனே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா

வேகமாகப் போகுமே என் படகு – ஐலசா
என் படகு – ஐலசா
வேண்டுமெனில் ஏறிக்கோ என் படகில் – ஐலசா
என் படகில் – ஐலசா



# அகரவரிசை அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | அணில் |  | எ | எறும்பு |  |
| ஆ | ஆமை |  | ஏ | ஏழு | 7 |
| இ | இறகு |  | ஐ | ஐந்து | 5 |
| ஈ | ஈ |  | ஒ | ஒன்று | 1 |
| உ | உழவர் |  | ஓ | ஓநாய் |  |
| ஊ | ஊசி |  | ஔ | ஔவை |  |

ஃ


| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | கண் |  | கா | காகம் |  |
| கி | கிளி |  | கீ | கீரி |  |
| கு | குரங்கு |  | கூ | கூண்டு |  |
| கெ | கெண்டி |  | கே | கேடயம் |  |
| கை | கை |  | கொ | கொக்கு |  |
| கோ | கோழி |  | கௌ | கௌதாரி |  |

# அகரவரிசையில் எழுதுவோம்




அன்னம் ஊஞ்சல் ஏற்றம் ஐவர் ஓணான் எறும்பு

இலை ஆடு உறி ஈட்டி ஔவை ஒட்டகம்



# ஆத்திசூடி



அனைவரும் உறவினர்.

ஈதல் இன்பம்.

ஒற்றுமை அமைதி.

கல்லார் நலிவர்.

கெடு நினைவு அகற்று.

சோர்வு நீக்கு.

தூய நீராடு.

தெருவெலாம் மரம் வளர்.

வெறும் பேச்சுப் பேசேல்.

வையம் வாழ வாழ்.

– பாவேந்தர் பாரதிதாசன்



### சொல்லும் பொருளும்

ஈதல் – கொடுத்தல்; இன்பம் – மகிழ்ச்சி; நலிவர் – துன்பம் அடைவர்;
கெடு நினைவு – கெட்ட எண்ணம்; அகற்று – நீக்கு; சோர்வு – சோம்பல்
வெறும் பேச்சு – பயனற்ற பேச்சு; பேசேல் – பேசாதே; வையம் – உலகம்.

- மாணவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஐந்து அல்லது ஆறு எழுத்துகளைக் கொடுக்கவும்.
- எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கச் சொல்லவும்.
- குறித்த நேரத்தில் அதிகமான சொற்களை உருவாக்கிய குழுவைப் பாராட்டவும்.

## சொல்லுங்க! சொல்லுங்க!

சொல்லுங்க! சொல்லுங்க! சொல்லுங்க!
தமிழ் மாதங்கள் பன்னிரண்டைச் சொல்லுங்க!
சித்திரை, வைகாசி, ஆனி,
ஆடி, ஆவணி, புரட்டாசி,
சொல்லுங்க! சொல்லுங்க! சொல்லுங்க!
அடுத்து வருவதைச் சொல்லுங்க!
ஐப்பசி, கார்த்திகை, மார்கழி,
தை, மாசி, பங்குனி
அப்படி நீங்களும் சொல்லுங்க!
ஆடிப் பாடிச் சொல்லுங்க!

### மாதங்கள் எழுதுவோம்



1. சித்திரை
2. ____
3. ____
4. ஆடி
5. ____
6. ____
7. ஐப்பசி
8. ____
9. ____
10. தை
11. ____
12. ____

# சுவை அறிவோம்



அம்மாவைப் போல்
நாமும் உணவைத்
தேடலாமா ?



















## சுவை கூறுவோம்! எழுதுவோம்!













# கிழமைகள் அறிவோம்

காலாண்டு விடுமுறையில் நம் வகுப்பில் படிக்கும் அறிவன் செய்த செயல்களை அவன் வாயிலாகத் தெரிந்து கொள்வோமா!



ஞாயிறு : மண்ணைக் கொத்தினேன்.

திங்கள் : கீரை விதைகளை விதைத்தேன்.

செவ்வாய் : நீர் தெளித்தேன்.

புதன் : விதைகள் முளைத்துள்ளனவா என உற்றுப்பார்த்தேன்.

வியாழன் : ஐ!........ விதைகள் மண்ணை முட்டியிருந்தன.

வெள்ளி : சிறிய செடிகள் முளைத்திருந்தன.

சனி : ஆகா! எவ்வளவு கீரைச் செடிகள்! மகிழ்ச்சியால் துள்ளினேன்.

அறிவனுக்கு நமது பாராட்டுகள்.
நீங்களும் இதைப்போல் செய்யலாமே!

வாரத்தின் முதல் நாள் ........................................

பள்ளி தொடங்கும் நாள் ........................................

வாரத்தின் நாள்கள் ........................................

# ஓசையோடு சொல்வேன்

சலசல என்று
இலைகள் அசைகின்றன.

குளுகுளு என்று
காற்று வீசுகிறது.



கடகட என்று
வண்டி ஓடுகிறது.

சடசட என்று
மழை பெய்கிறது.

கலகல என்று
குழந்தை சிரிக்கிறது.

## பொருத்துவேன்! சொல்லிப் பழகுவேன் !

| | |
|---|---|
| குளுகுளு | மழை |
| சலசல | வண்டி |
| சடசட | இலைகள் |
| கலகல | காற்று |
| கடகட | சிரிப்பு |

# வண்ணங்கள் அறிவோம்




மிட்டாய்களின் வண்ணங்களை எழுதுவேன்



நீலம்

.................................


.................................

.................................

.................................

நாங்கள் படிப்போம்

# பாப்பாவைத் தேடி




குழந்தைகள் இக்கதையைப் படித்துப் பொம்மலாட்டமாக நடிக்க உதவவும்.

# தமிழ் எழுத்துகள் வரிசை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |

# என்னைப் பற்றி...

| | |
|---|---|
| என் பெயர் | : ............................................................ |
| நான் படிக்கும் வகுப்பு | : ............................................................ |
| அப்பா பெயர் | : ............................................................ |
| அம்மா பெயர் | : ............................................................ |
| அண்ணன் பெயர் | : ............................................................ |
| அக்காள் பெயர் | : ............................................................ |
| தம்பி பெயர் | : ............................................................ |
| தங்கை பெயர் | : ............................................................ |
| தாத்தா பெயர் | : ............................................................ |
| பாட்டி பெயர் | : ............................................................ |
| நண்பன் பெயர் | : ............................................................ |
| ஊர்ப் பெயர் | : ............................................................ |
| எனக்கு விருப்பமான வண்ணம் | : ............................................................ |
| எனக்கு விருப்பமான பழம் | : ............................................................ |
| எனக்கு விருப்பமான விளையாட்டு | : ............................................................ |